உளுந்தூர்பேட்டை – கூவாகம் ஏரியில் தவறி விழுந்து உயிரிழந்த

சிறுவன் - சிறுமியின் பெற்றோருக்கு தலா ரூ.3 லட்சம் நிதி உதவி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, மே 6 -

கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், கூவாகம் ஏரியில் தவறி விழுந்து உயிரிழந்த சிறுவன் மற்றும் சிறுமியின் பெற்றோர்களுக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், ஆவிகொளப்பாக்கம் குறுவட்டம், வடக்கு நெமிலி கிராமத்தைச் சேர்ந்த ராஜேந்திரன் மற்றும் திருமதி கண்மணி தம்பதியரின் மகள் செல்வி ஜெயலெட்சுமி (வயது 10) மற்றும் விழுப்புரம் மாவட்டம், திருவெண்ணைநல்லூர் வட்டம், டி. எடையார் கிராமத்தைச் சேர்ந்த விஜி மற்றும் திருமதி சினேகா தம்பதியரின் மகன் செல்வன் நித்தேஷ் (வயது 5) ஆகிய இருவரும் நேற்று (3.5.2025) மதியம் சுமார் 2.00 மணியளவில் கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டம், கூவாகம் கிராமத்தில் உள்ள கூவாகம் ஏரியில் தவறி விழுந்து மேற்படி சிறுவனும், சிறுமியும் நீரில் மூழ்கி உயிரிழந்த செய்தி அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்த சிறுவன் மற்றும் சிறுமியின் பெற்றோர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த

இரு குழந்தைகளின் பெற்றோர்களுக்கும் தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

கடலூர் கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் அணியின் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டையை கடலூர் கிழக்கு மாவட்ட செயலாளரும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், வழக்கறிஞரணி மாவட்ட அமைப்பாளர் அருள் ஜோதி, வழக்கறிஞர் எம்.கே. ராமன், மாவட்ட நிர்வாகிகள் எம்.இ.சையது அன்சாரி, அ.மாரிமுத்து, எஸ்.கே.அருணாச்சலம் மற்றும் கழக வழக்கறிஞர்கள் ஆர்.பாபு, வே.ஹரிஹரன், எஸ்.புகழேந்தி ஆகியோரிடம் வழங்கினார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எஸ்.ரகுபதி அறிக்கை!

புதுக்கோட்டை, மே 6-

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளகும், சட்டத்துறை அமைச்சரு மான எஸ். ரகுபதி வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு : -

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் எதிர்வரும் 07.05.2025 புதன்கிழமை காலை 10.30 மணியளவில் புதுக்கோட்டை மாலையீடு கற்பக விநாயகா (ஏ.சி.) திருமண மகாலில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிர மணியன் தலைமையிலும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ. வீ.மெய்ய நாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், மாநிலங்களவை உறுப்பினர் எம்.எம். அப்துல்லா ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது .

இந்நிகழ்வுகளில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: கழக வளர்ச்சி பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

சேலம் கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிக்கை!

சேலம், மே 6 -

சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க செயற்குழுக் கூட்டம் இன்று (06.05.2025 செவ்வாய்க்கிழமை) காலை 10.00 மணி அளவில் வாழப்பாடியில் உள்ள சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க அலுவலகம் தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் மாவட்ட கழக அவைத்தலைவர் மு.ரா.கருணாநிதி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழகத்தின் துணை அமைப்புகளான அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்:

1. சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர்கள் கூட்டத்தில் 2026 சட்டமன்ற தேர்தல் குறித்து கழகத் தலைவரின் அவர்களின் ஆலோசனைகள் குறித்து

2. "நாடு போற்றும் நான்காண்டு, தொடரட்டும் பல்லாண்டு!", சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள்

3. பவள விழாக் கண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக்குழு -

கழகத்தலைவரின் அறிவுறுத்தலின்பேரில் கூடல்மாநகரில் ஜூன் 1ஆம் நாள் கூடுகிறது!

4. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

"நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு!" சாதனை விளக்கப் பொதுக் கூட்டங்கள் -

'திராவிட மாடல்' அரசின் சாதனைகள் பற்றி துண்டுப் பிரசுரங்கள் வழங்க வேண்டும்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் சிறப்புரை!

திருவள்ளூர், மே 6 -

திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் மாநகர ஒன்றிய நகர பகுதி பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் மா.இராஜி தலைமையில் நடைபெற்றது

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில தொழிலாளர் அணி செயலாளர் பூவிருந்தவல்லி தொகுதியின் பார்வையாளர் PTC செல்வராஜ், மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் ஆவடி தொகுதி பார்வையாளர் செல்வி நிவேதா ஜெசிகா மாநில சிறுபான்மை நல உரிமை பிரிவு இணை செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், மாவட்ட பொருளாளர் தொழுவூர் பா.நரேஷ்குமார் பொதுக்குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், எம். முத்தமிழ் செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனாசுதாகர், எஸ்.சங்கர், ஆகியோர் முன்னிலை வகித்தார்கள் ஆவடி மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ் வரவேற்புரையற்றினார் இதில் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளர் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனை வழங்கினார்

அப்போது பேசியா அவர் தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட மாடல் நாயகன் தமிழ் நாட்டில் நல்லாட்சி நடத்திக் கொண்டு வருகிறார் எனவே 2026 தேர்தலில் 234 தொகுதிகளையும் வென்று ஏழாவது முறையாக திமுக ஆட்சி அமைப்பது உறுதி

கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட நாடு போற்றும் நான்காம் ஆண்டு தொடரட்டும் இது பல்லாண்டு என்ற தலைப்பில் கூட்டங்கள் நடத்திட வேண்டும் என்று அறிவிப்புக்கினங்க திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதி செயலாளர்கள் பொதுக்கூட்டங்களை பொதுமக்கள் கூடுகின்ற இடங்களில் நடத்திட வேண்டும்.

அது மட்டுமில்லாமல் 4 ஆண்டு சாதனைகளை மக்களிடம் கொண்டு செல்லும் வகையில் திராவிட மாடல் அரசியல் செய்யப்பட்ட சாதனைகளை துண்டறிக்கையை சேர்க்க வேண்டும் ,

முத்தமிழ் அறிஞர் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதிகளில் உள்ள வார்டு கிளைகளில் கழக கொடியை ஏற்றி ஏழை எளிய பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் மருத்துவ முகாம் ரத்ததான முகாம் கண் சிகிச்சை முகாம் அண்ணன் தானம் வழங்கும் நிகழ்ச்சி, மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவி வழங்குதல் மன வளர்ச்சிகுன்றி இடத்தில் உள்ளவர்களுக்கு அன்னதானம் மற்றும் ஜூன் மாதத்தில் பள்ளிகள் திறப்பு இருப்பதால் பள்ளி மாணவ மாணவிகளுக்கு கல்வி உபகரணங்கள் நோட் புத்தகங்கள் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கப்பட வேண்டும்

திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் உள்ள வாக்குச் சாவடிகளிலும் ஒரு வாக்குச்சாவடி வீதம் தகவல் தொழில்நுட்ப அணியை சார்பாக ஒருவரை நியமிக்க வேண்டும்

இதனைத் தொடர்ந்து பேசிய அவர் கத்தோலிக்கத் திருச்சபைத் தலைவர் போப் பிரான்சிஸ் அவர்களின் மறைவுக்கும் தமிழ்நாடு அரசு சார்பில் என்னை அஞ்சலி செலுத்த அனுப்பி வைத்த தமிழ்நாட்டு முதலமைச்சர் அண்ணன் கழகத் தலைவர் அவர்களுக்கு கூட்டத்தின் வாயிலாக நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்

திருவள்ளூர் மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற அரசு விழாவில் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கிய கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சருக்கு கூட்டத்தின் சார்பாக நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்

2026 சட்டமன்றத் தேர்தல் வரவு இருப்பதால் திருவள்ளூர் மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் அதற்கான பணிகளை மிக மும்முரமாக செயல்பட வேண்டும் பகுதிகளில் உள்ள பொதுமக்களிடம் தங்கள் குறைகளை கேட்டு உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் தெரிவித்து குறைகளை தீர்க்க வேண்டும் என கேட்டுக் கொண்டார்

கூட்டம் முன்னதாக ஜம்மு காஷ்மீர் மாநிலம் பகல்காமில் நிகழ்த்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதலில் உயிரிழந்த அப்பாவிப் பொதுமக்கள் அனைவருக்கும், முற்போக்கான சிந்தனைகளுடன் கடமையாற்றிய கத்தோலிக்கத் திருச்சபைத் தலைவர் போப் பிரான்சிஸ் அவர்களின் மறைவுக்கும் இரங்கல் தெரிவித்து கொண்டார்கள்

இந்நிகழ்ச்சியில் ஆவடி மாநகர மேயர் ஜி.உதயகுமார், ஒன்றிய நகர பகுதி பேரு கழகச் செயலாளர்கள் பேபிசேகர், பொன்.விஜயன் , டி.தேசிங்கு, தி.வை.இரவி, என்.இ.கே. மூர்த்தி, ப.ச.கமலேஷ், ஜி.ஆர். திருமலை, ஆர்.ஜெயசீலன், சே.பிரேம் ஆனந்த், தி.வே. முனுசாமி, தங்கம் முரளி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் கே.சுரேஷ்குமார், வி.தியாகராஜன், ஏ.ஜெ.பவுல், பெ.வினோத், ஏ.ஜி.ரவி, ஆர். பிரவீன் குமார், த.குமரேசன், எம்.இளையன், கு.தமிழ் செல்வி, ஒ.ஆர்.நாகூர்கனி, ப.குமரேசன், என்.சண்முகம், ஜி.ராஜேஷ், ஐ.ஜாக்கப், பசீர் அகமது, ஆதிகேசவன், ஆர். செந்தாமரை, ஜி.சி.சி. கருணாநிதி, வி.ஜெ. உமா மகேஸ்வரன், அக்னி ராஜேஷ் , டி.பிரியா குமார், துணை அமைப்பாளர்கள் அணிகளின் நிர்வாகிகள் கழக முத்த முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.

திருப்பூர் மாவட்டம், குண்டடம் ஒன்றியம், சிறுகிணர் ஊராட்சி, நொச்சிபாளையத்தில் அனைத்து கிராம அண்ண மறுமலர்ச்சித்திட்டத்தின் கீழ் சிறுகிணர், கொழுமங்குழி, கொக்கம்பாளையம் ஊராட்சிகளில் பல்வேறு திட்டப்பணிகள் முதலமைச்சர் அவர்களின் கிராமசாலைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் சடையபாளையம் மற்றும் கொளத்துப்பாளையம் ஊராட்சிகளில் சாலை அமைக்கும் பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தனர். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், சு.சந்திரசேகரன், சிவ.செந்தில்குமார், கே.எஸ்.கருணாகரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

கோடை வெயிலின் தாக்கத்திலிருந்து பக்தர்களைக் காக்க - திருக்கோயில்களில்

தற்காலிகப் பந்தல்கள் - தேங்காய் நார் விரிப்புகள் - பாதுகாக்கப்பட்ட குடிநீர்- நீர்மோர் !

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னேற்பாடு!

சென்னை, மே 6 –

கோடை வெயிலின் தாக்கத்திலிருந்து பக்தர்களைக் காக்க திருக்கோயில்களில் தற்காலிக பந்தல்கள், தேங்காய் நார் விரிப்புகள், பாதுகாக்கப்பட்ட குடிநீர், நீர்மோர் உள்ளிட்ட முன்னேற்பாடு பணிகள் செய்யப்படுகிறது என இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று முன்தினம் (4.5. 2025) சென்னை, பழைய வண்ணாரப்பேட்டை, கோதண்ட ராமர் திருக்கோயிலில் நடைபெற்ற திருக்குடமுழுக்கு நன்னீராட்டு பெரு விழாவில் கலந்துகொண்டனர்.

பின்னர், அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:–

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்ற திலிருந்து இன்றுவரை 2,911 திருக்கோயில்களுக்கு குடமுக்கு நடைபெற்றுள்ளது. இன்றைய தினம் மட்டும் திருநெல்வேலி மாவட்டம், பாபநாசம் திருக்கோயில், திருச்சி மாவட்டம் அன்பில், சுந்தரராஜ பெருமாள் திருக்கோயில் உள்ளிட்ட 31 திருக்கோயில்களுக்கு குடமுக்கு நடைபெற்றுள்ளது. வரும் ஜூலை மாதத்திற்குள் 3,000 குடமுழுக்குகளை நிச்சயம் எட்டுவோம். இந்த ஆட்சியானது குடமுழுக்கில் ஒரு பொற்காலம் படைத்த ஆட்சி என்பதை நிரூபிக்கின்ற வகையில் ஏராளமான குடமுழுக்கு பணிகள் விரைந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

குடமுழுக்கில் பொற்காலம் படைத்த ஆட்சி!

இந்த அரசு பொறுப்பேற்றபின் இது வரை திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.7,665.61 கோடி மதிப்பிலான 7,546.33 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. மாநில வல்லுநர் குழுவால் 11,808 திருக்கோயில்களுக்கு திருப்பணி அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றன. ஒட்டுமொத்தமாக கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ. 5,917.11 கோடி மதிப்பிலான 25,150 திருப்பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. வரலாற்றிலே இல்லாத அளவிற்கு இந்து சமய அறநிலைத்துறையின் திருக்கோயில்களுக்கு உபயதாரர்கள் ரூ.1,323.77 கோடி மதிப்பிலான 10,414 திருப்பணிகளை செய்து தந்துள்ளனர். பழைய வண்ணாரப் பேட்டை, கோதண்டராமர் திருக்கோயிலுக்கு திருப்பணிகளை செய்து தந்த உபயதாரர் பாபுவுக்கு மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு 459 பெருமாள் திருக்கோயில்கள், 42 ஆஞ்சநேயர் திருக்கோயில்கள், 41 கிருஷ்ணர் திருக்கோயில்கள், 28 ராமர் திருக்கோயில்கள் என 570 வைணவ திருக்கோயில்களுக்கு இதுவரையில் குடமுழுக்கு நடந்திருக்கின்றது. ஒரு ராமர் திருக்கோயிலுக்கே கொண்டாட்டம் போடுகின்ற காலங்களில் 28 ராமர் திருக்கோயில்களுக்கு குடமுழுக்கினை நடத்தியுள்ளோம். இதுபோன்ற திருப்பணிகள் முழு வீச்சில் மேற்கொள்வதால் தான் இந்து சமய அறநிலையத்துறை வரலாற்றுச் சாதனைகளை பதிக்கின்ற ஒரு நல்ல சூழல் நிறைவேறி இருக்கின்றது, இந்தப் பணிகள் தொடரும்.

கோடை வெயிலின் தாக்கத்திலிருந்து பக்தர்களை காத்திடும் வகையில் இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்களில் எந்த வகையிலும் தீப்பிடிக்காத வகையில் பாதுகாப்பான தற்காலிக கீற்றுப் பந்தல்கள் அமைத்தல், திருக்கோயில் பிரகாரங்களின் நடைபாதைகளில் தேங்காய் நார் விரிப்புகள், வெப்பத்தை தடுக்கின்ற வெள்ளை நிற பெயிண்ட் அடித்தல், நடைபாதைகளில் வெப்பத்தை குறைத்திடும் வகையில் அவ்வபோது தண்ணீர் பீச்சி அடிப்பதற்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், பக்தர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர், ஒரு சில இடங்களில் நீர்மோர், எலுமிச்சை பானகம் போன்றவை வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மதுரை சித்திரை திருவிழாவிற்கான முன்னேற்பாடு பணிகளை மாவட்ட நிர்வாகம், மாநகராட்சி, வருவாய்துறை, காவல் துறை, சுகாதாரத்துறை, இந்து சமய அறநிலையத்துறை உள்ளிட்ட துறைகள் ஒருங்கிணைந்து சிறந்த முறையில் மேற்கொண்டு வருகின்றன. எந்த விதமான சிறு அசம்பாவிதமும் இல்லாமல் மீனாட்சி திருக்கல்யாணம், திருத்தேர் பவனி, அழகர் புறப்பாடு, அழகர் வைகை ஆற்றில் இறங்குவது போன்றவை சிறப்பாக நடைபெற வேண்டுமென முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டி இருக்கின்றார். அதன்படி அனைத்தும் சிறப்பாக நடைபெற மாவட்ட அமைச்சர்களோடு இணைந்து பணியாற்றி வருகிறோம். மீனாட்சி திருக்கல்யாண நிகழ்வில் துறையின் அமைச்சர் என்ற முறையில் பங்கேற்கவுள்ளேன். அனைத்திற்கும் எல்லாம் வல்ல இறைவனும் துணை நிற்பார்.

சட்டமன்றத்தில் நிகழ்வுகளை பார்த்திருப்பீர்கள். அதில் கோபப்பட்டு அதிகமாக கத்தியவர் எதிர்க்கட்சி தலைவர் தான். ஆனால் எங்கள் முதலமைச்சர் அனைத்தையும் உணர்ந்து ஐம்புலன்களை அடக்கி சர்வசாதாரணமாக இந்த சட்டமன்ற கூட்டத் தொடரை வெற்றிகரமாக நடத்தி முடித்து காட்டினார். ஜனநாயகத்தின் பாதுகாவலர் எங்கள் முதல்வர். சாதாரணமாக சட்டமன்ற இறுதி நாளில் முதலமைச்சர் அவர்கள் கை கூப்பி வணங்கி விட்டு செல்வார்கள். ஆனால் எங்கள் முதல்வர் அவர்களோ இன்னார், இனியவர் என்று பாராமல் அனைத்து எதிர்கட்சித் தலைவர்களுக்கும் அவர்களுடைய இருக்கைக்குச் சென்று கை குலுக்கி நான் எந்த சூழலையும் சமாளிப்பேன் என்பதை வெளிக்காட்டினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வாழ்க்கையில் பயம் என்பது என்னவென்று தெரியாது. அவர் உறுதியாக நிற்பார், உறவுக்கு கை கொடுப்பார், உரிமைக்கு ஓங்கி குரல் கொடுப்பார், ஒன்றியத்திற்கு எந்த வகையிலும் அடி பணிந்து செல்லாத ஆற்றல் வாய்ந்த இரும்பு மனிதர் எங்கள் முதல்வர். ஆனால் ஒரே நாளில் அமித்ஷா வந்து இங்கே உட்கார்ந்து அவருடைய ஆளுமையை எடப்பாடி அவர்களுக்கு எவை எல்லாம் காட்டி பணிய வைக்க முடியுமோ அதையெல்லாம் காட்டி பணிய வைத்து ஒரே நாளில் கூட்டணியை உறுதி செய்து விட்டு சென்றார். ஆகவே எடப்பாடிக்குதான் பயம் வயிற்றிலும் தெரிகிறது கண்ணிலும் தெரிகிறது. எங்கள் முதலமைச்சர் கண்ணை பார்த்தால் 1,000 வாட்ஸ் மின்சாரம் அவர் கண்ணில் இருந்து புறப்படுகின்றது. இதில் எதிரிகள் 2026ல் பொசுங்குவார்கள்.

திருமதி தமிழிசையைப் பொறுத்தவரை பிரதமர் மோடியின் வழியிலே செயல்பட்டு தன்னைத்தானே புகழ்ந்து கொள்கின்றவர். நேற்றைய தினம் முதல் வருக்கு எடுக்கப்பட்ட பாராட்டு விழா என்பது அரசோ அல்லது தி.மு.க.வோ எடுத்த பாராட்டு விழா அல்ல, அனைத்து பல்கலைக்கழகங்களாலும் எடுக்கப்பட்டதாகும். முதல்வர் அவர்கள் பாராட்டை விரும்பாதவர்.

ஒன்றியத்திற்கே வழிகாட்டிய முதல்வர்!

நேற்றைய தினம் அவர் பேசுகின்ற போது பாராட்டை நான் எங்கும் புறக்கணிப்பவன், பல்கலைக்கழக துணைவேந்தர்கள் கேட்டுக் கொண்டதால் இசைந்தேன் என்று குறிப்பிட்டார். ஒன்றியத்திற்குத் தேவைப்படுகின்ற ஒரு வழிகாட்டுதலை தன்னுடைய சட்டப் போராட்டத்தால் உறுதியான நடவடிக்கைகளால் ஆளுகின்ற அரசைத் தவிர்த்து எதிர்க்கட்சி ஆட்சி செய்கின்ற மாநிலங்களில் இன்னல்களை விளைவிக்கும் ஆளுநர்களுக்கு ஒரு குட்டை வாங்கிக் கொடுத்தவர். ஒன்றியத்திற்கே வழிகாட்டியவர் எங்கள் முதல்வர் என்பதால்தான் நேற்றைய தினம் பாராட்டு விழா நடத்தப்பட்டது.

காலம் முழுவதும் தூக்கி வைத்து முதல்வரைக் கொண்டாடுகின்ற, போற்றுகின்ற வகையில் பாராட்டுகள் அமைய வேண்டும். இது ஒரு நாளோடு நின்று விடக்கூடாது. திருமதி தமிழிசை சௌந்தர்ராஜன் அவர்களுக்கு வயிற்று எரிச்சல். அக்னி வெயில் ஆரம்பித்திருக்கிறது. இன்னும் அதிக வெப்பத்தோடு வார்த்தைகளைக் கக்குவார். நாங்கள் குளிர்ந்த காற்றைத் தேடி நடந்து கொண்டிருக்கின்றோம். மக்களை குளிர்ச்சியாக அழைத்துச் செல்வோம்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

திருப்பூர் வடக்கு மாவட்டம், அவினாசி நகரக் கழகத்தின் சார்பில் நகர கழகச் செயலாளர் திராவிடன் வ.வசந்தகுமார் ஏற்பாட்டில் புதிய பேருந்து நிலையம் அருகில் மே 1 தொழிலாளர் தினத்தை முன்னிட்டு ஆட்டோ தொழிற்சங்க நிர்வாகிகளுக்கும், பொதுமக்களுக்கு அறுசுவை உணவினை திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் வழங்கினார். இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ்.சரவணன் நம்பி, அவிநாசி ஒன்றியச் செயலாளர் பா.சிவப்பிரகாஷ், அவைத் தலைவர் ராயப்பன், துணைச் செயலாளர்கள் பர்கத் சாந்தி சீனிவாசன், மாவட்டப் பிரதிநிதி வேலுசாமி, சின்னக்கண்ணன் பொருளாளர் தங்கவேல், பேரூர் முன்னாள் செயலாளர் கே.சி.பொன்னுச்சாமி உள்பட தொழிற்சங்க நிர்வாகிகள், ஆட்டோ ஓட்டுநர் சங்க நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.